# பச்சை பூமி

இயற்கை வேளாண்மை, சூழல் மேலாண்மைக்கான மாத இதழ்

PACHAI BOOMI VOLUME : 06 ISSUE : 03 JULY - 2016 RS.25



# அழிவின் விளிம்பில் அருமைத் தேவாங்குகள்!



எந்தவொரு சட்டத்தையும் முறையா பயன்படுத்தலேன்னா, அது பெரிய ஆபத்துல தான் முடியும். நம்ம ஊர்கள்லயும், தோட்டங்கள்லயும் வன விலங்குகள் புகுந்து, பயிர்கள நாசமாக்கிருச்சு, ஆடு மாடுகள அடிச்சிருச்சு, யானை மிதிச்சிருச்சுன்னு சொல்றத அடிக்கடி கேக்குறோம்.

நேர்லயும் பாக்குறோம். இதுக்கு யாரு காரணம்ன்னு யோசிச்சா, நாமதான்னு நல்லாவே தெரியும். நாம செஞ்சுக்கிட்டிருக்குற தப்புக தான் இந்த எல்லாத்துக்கும் காரணம்.

இதைப் படிச்சுப் படிச்சு சொன்னாலும், காட்டுக்கத்தா கத்துனாலும் எங்களுக்கு என்னான்னு நெனச்சிட்டுப் போறவங்க தான் அதிகம். இதுதான் நமக்குப் பெரிய ஆபத்து.

இந்த மண்ணுல மரம், செடி, கொடி, பாம்பு, பல்லி, தேளு, பூரான், ஈ, எறும்பு, எலி, பூனை, நாயி, நரி, சிங்கம், சிறுத்தை, மானு, மயிலு, குயிலு, குருவி, கிளி, பருந்துன்னு, மொத்தத்துல ஒரு செல் உயிரியில இருந்து ஓங்கி நிக்குற யானை வரைக்கும் எல்லாமே இருக்கணும்.

இவங்கெல்லாம் இருந்தாத்தான் நாம நல்லா இருக்க முடியும். இதுல குழப்பம் வர்றப்ப தான் சிக்கலே உருவாகுது. இப்போ, நம்ம கண்ணு முன்னால திரிஞ்ச உயிரினம் ஒண்ணு அழிஞ்சுக்கிட்டு வர்றதப் பத்தித்தான் இங்கே சொல்லப் போறேன்.

நம்ம ஊர்ப்பக்கம் முன்னயெல்லாம் கிளி ஜோசியம், எலி ஜோசியம் சொல்றத மாதிரி, தேவாங்க குழந்தையப் போலத் தூக்கிக்கிட்டு வந்து, தாயத்தை மந்திரிச்சுக் குடுப்பாங்க.

இந்தத் தாயத்தைக் குழந்தைகளுக்குக் கட்டுனா, அதுக ஆரோக்கியமா இருக்கும்ங்கிறது நம்பிக்கை. இப்பிடி உலா வந்துக்கிட்டிருந்த தேவாங்கு இப்போ கொஞ்சம் கொஞ்சமா அழிஞ்சுக்கிட்டு வருதுங்கிறது தான் சோகம்.

இதுல கொஞ்சம் நிம்மதி என்னென்னா, ஆசியாவிலேயே திண்டுக்கல் மாவட்டம் அய்யலூர் வனப்பகுதியில தான் கொஞ்ச நஞ்சம் தேவாங்குக இருக்காம். அதனால, அய்யலூர் காட்டுப்பகுதி தேவாங்குகள் சரணாலயமா அறிவிக்கப்பட்டிருக்கு.

தேவாங்கு, குரங்கு வகையில ஒண்ணு. அப்போ நாம மட்டும் எங்கயிருந்து வந்தோம்ன்னு நீங்க நினைக்குறது எனக்கு நல்லாவே புரியுது. இந்தத் தேவாங்குக்கு அறிவு ஜாஸ்தி. உலகளவுல குரங்குகள்ல 800க்கும் மேற்பட்ட வகைகள் இருக்குன்னு சொல்றாங்க. அதுல ஒண்ணுதான் தேவாங்கு. குட்டித் தேவாங்குன்னு சொல்லப்படுற லாரிஸ் லைடிக் கெரியான்ஸ் தேவாங்குகள், இந்தியாவின் கிழக்குத் தொடர்ச்சிமலைப் பகுதியின் மழை மறைவுப் பகுதிகள்ல, குறிப்பா தமிழக, ஆந்திர, கேரளக் காடுகள்ல இருக்கு.

இந்த நிலையில, அய்யலூர் வனப் பகுதியில எத்தனை தேவாங்குக இருக்குன்னு, திண்டுக்கல் காந்திகிராம் பல்கலைக் கழகமும், சீட்ஸ் தன்னார்வ நிறுவனமும் இணைந்து நடத்திய கணக்கெடுப்பு, பாதியளவு தேவாங்குகள் அழிஞ்சு போச்சுன்னு சொல்லுது. தேவாங்கோட பூர்விகம் இந்தியாவா இருந்தாலும், இலங்கையிலயும் இருக்குன்னு

சொல்றாங்க.

இப்போ பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு அமைப்பு, இந்தத் தேவாங்கு இனத்தை, அழிந்து வரும் விலங்குகள் பட்டியலில் சேர்த்திருக்கு. அதனால, இந்தத் தேவாங்குகளைப் பாதுகாக்குறதுக்கும், மக்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்குறதுக்கும் தான் இந்தக் கணக்கெடுப்பு நடந்துச்சு. இந்தக் கணக்கெடுப்பைப் பத்தி, காந்திகிராம் பல்கலைக்கழக உயிரியல் துறையின் பேராசிரியர் இராமசுப்பு சொன்ன தகவல்களைப் படிங்க.

"தேவாங்குகள் கூட்டம் கூட்டமாக வாழும் தன்மையைக் கொண்டவை. ஒரு கூட்டத்தில் நாலில் இருந்து ஏழு தேவாங்குகள் இருக்கும். அய்யலூர் வனப்பகுதியில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு நான்கு என்னும் கணக்கில் தேவாங்குகள் முன்பு இருந்தன. ஆனால், இப்போது இரண்டாகக் குறைந்து விட்டன. அதாவது, பாதி தேவாங்குகள் அழிந்து விட்டன. அதிலும், பெண் தேவாங்குகள் குறைந்து வருகின்றன. ஆண்டுக்கு இரண்டு தடவை இனச்சேர்க்கையில் ஈடுபட்டாலும், ஒருமுறை மட்டும்தான் தேவாங்குகள் கருவுறுகின்றன.

தேவாங்கின் கர்ப்பக்காலம் 170 நாட்கள். இரண்டு குட்டிகளைப் போடும். ஆனால், நாங்கள் கணக்கெடுத்த போது பார்த்த தேவாங்குகள் எல்லாம் ஆளுக்கொரு குட்டியுடன் தான் இருந்தன. இதற்கு என்ன காரணம் என்பதை ஆய்வு செய்து வருகிறோம்.

காய்கறி மற்றும் தோட்டப் பயிர்களைத் தாக்கும் வெட்டுக் கிளிகள், கம்பளிப் பூச்சிகளைச் சாப்பிட்டு, இவற்றின் பெருக்கத்தைத் தேவாங்குகள் கட்டுப்படுத்துகின்றன. ஒருசில எலி வகைகளையும் சாப்பிட்டு அவற்றின் பெருக்கத்தையும் குறைக்கின்றன. தோட்டப் பகுதிகளில் உணவைத் தேடும் தேவாங்குகள், தேள்களையும் சாப்பிட்டு விவசாயிகளுக்கு ஆதரவாக உள்ளன. நமக்கு உணவைத் தரும் எந்தப் பயிரையும் தேவாங்குகள் அழிப்பதில்லை.

காடுகளில் இவற்றின் எண்ணிக்கை குறைவதற்கு வேட்டையாடுதல் ஒரு காரணமாகக் கருதப்பட்டாலும், பயிர்களில் தெளிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகள் தான் மிக முக்கியக் காரணமாக உள்ளன. மேலும், வெளிநாடுகளில் மருத்துவத் துறையில் நடக்கும் உடலியல் ஆய்வுக்கும், ஊக்க மருந்து தயாரிப்புக்கும், மாந்திரிகச் செயல்களுக்கும் எனத் தமிழகத்தில் இருந்து தேவாங்குகள் கடத்தப்படுகின்றன.

தேவாங்குகளின் தோலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் மூலம் தொழுநோய், முடக்குவாதம் ஆகிய நோய்கள் தீரும் என்னும் மூட நம்பிக்கையால் இவை வேட்டையாடப் படுகின்றன. இதுமட்டுமின்றிக் காடுகளின் ஊடே செல்லும் சக்திமிக்க மின்கம்பிகளில் சிக்கியும் அழிகின்றன.

பாறை இடுக்குகள், முட்புதர்கள், இலையுதிர்க் காடுகள், வறண்ட நிலங்கள், பூச்சிகள் நிறைந்த கள்ளிக்காடுகள் ஆகியவற்றில் தேவாங்குகள் வாழுகின்றன. பூச்சிகளே தேவாங்குகளின் முக்கிய உணவாகும். பகலில் தூங்கி இரவில் இரையைத் தேடும். அதனால் தான் இரவு நேரத்தில் டார்ச் வெளிச்சத்தைக் கொண்டு தேவாங்குகளைக் கணக்கெடுக்கிறோம்'' என்றார்.

இப்போ, திண்டுக்கல் சீட்ஸ் அறக்கட்டளை நிறுவனர் முத்துசாமி சொன்ன தகவல்களைப் படிங்க.

"இப்படிப்பட்ட அருமையான விலங்கினத்தை மருந்து, மாந்திரிகம் என்னும் மூட நம்பிக்கையால் அழித்து வருகிறோம். தேவாங்குகள் காக்கப்பட வேண்டிய அற்புத ஜீவன்கள். இந்தத் தேவாங்குப் பாதுகாப்பு வேலையில் நாங்கள் மிகமிக அக்கறையுடன் ஈடுபட்டு வருகிறோம். இந்தப் பணி எனக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது'' என்றார்.

கணக்கெடுக்குறது மட்டுமில்லாம, தேவாங்குகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் கூட்டங்கள் மூலமும், கலைநிகழ்ச்சிகள் மூலமும், எடுத்துச் சொல்லி மக்களுக்குப் புரிய வைக்கிறாங்க.

என்னதான் விழிப்புணர்வைக் கொடுத்தாலும் மக்கள் அதைப் புரிஞ்சுக்கிட்டுச் செயல்பட்டால் தான், இந்தத் தேவாங்கு இனத்தை அழிவிலிருந்து மீட்க முடியும்; நம்ம அய்யலூரு அருமையான தேவாங்குச் சரணாலயமா இருக்குன்னு பெருமைப் பட்டுக்கவும் முடியும்.

- துரை.சந்தோசு